[20th September 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Does not arise.

9–20 a.m. SRI M. K. SOMASUNDARAM : சார், ஹெல்த் இன்ஸ்பெக்டர் அவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக இருப்பதால் ஹெல்த் அசிஸ்டெண்டுகளையும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக நியமிப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதுதான் இல்லையென்று சொன்னேன்.

Aranmanaipudur bridge

* 357 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, தேனியை அடுத்த அரண்மனைப்புதூர் பாலம் கட்ட பொது மக்கள் கொடுத்த பணம் எவ்வளவு ?

(ஆ) அந்தப் பாலம் கட்ட ஆரம்பித்து எவ்வளவு காலமாகிறது ?

(இ) இன்னும் கட்டி முடிக்காததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) Rupees 20,000.

(b) & (c) The work was commenced on 6th June 1958. The contractor for the work stopped away after executing a portion of the work. No contractor came forward to execute the balance of work. The work is being executed departmentally through piece workers. The work is likely to be completed by the end of December 1958.

SRI N. R. THIAGARAJAN : பொதுமக்களிடமிருந்து இருபதாயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு கட்டுகிறோம், கட்டுகிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்தால், இனி அவர்கள் அடுத்த காரியத்திற்குப் பணம் கொடுப்பது நின்றுவிடாதா ? ஆகவே பொதுமக்களிடம் இருந்து பணம் வாங்கிவிட்டால் அந்தக் காரியத்தை உடனடியாகச் செய்யும்படியாக அதிகாரிகளுக்கு உத்தரவிடுவார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : உடனடியாகச் செய்ய வேண்டுமென்றுதான் கண்டிராக்டிடம் விட்டோம். அவன் அந்த வேலையைச் செய்யாத காரணமாக இப்போது சர்க்காரே அதை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Major panchayats

* 358 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எத்தனை மேஜர் பஞ்சாயத்துக்களை இந்த ஆண்டு முனிசிபாலிடியாக ஆக்க உத்திரவிடப்பட்டுள்ளது ?

(ஆ) அவைகளின் பெயர்கள் என்ன ?

(இ) 20,000 ஜனத்தொகையும் ஒரு லட்சத்திற்குமேல் வருமானமுமுள்ள மேஜர் பஞ்சாயத்துக்களை முனிசிபாலிடியாக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) None, Sir.

(b) Does not arise.

(c) Yes, Sir.

20th September 1958]

SRI M. SELVARAJ : தற்சமயம் மேஜர் பஞ்சாயத்துகளுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் இருந்து, இருபதாயிரத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகையும் இருந்தால் அவற்றை முனிசிபாலிடியாக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்போது அரசாங்கத்தின் உத்தேசமும் அது தான். இப்போது ஒரு லட்சத்திற்கு மேல் வருமானம் வந்து, ஜனத்தொகை இருபதாயிரத்திற்கு மேலும் இருந்தால் அவற்றை முனிசிபாலிடியாக மாற்ற ஏற்பாடு செய்து வருகிறோம்.

SRI K. B. S. MANI : ஒரு லட்சத்திற்கு மேல் வருமானமும், 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையும் கொண்ட சீர்காழி பஞ்சாயத்தை முனிசிபாலிடியாக்க வேண்டுமென்று எத்தனையோ முறை கேட்கப்பட்டிருந்தும் அது தவிர்க்கப்பட்டிருக்கிறதே அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்போதுதான் அவைகளைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். தவிர்த்துவிட்டதாகத் தெரியவில்லை.

SRI A. GOVINDASAMY : தென்னுற்காடு மாவட்டத்தில் உள்ள நெல்லிக்குப்பம் முனிஸிபாலிடியை . . . . .

MR. SPEAKER : ஒவ்வொரு முனிஸிபாலிடியாகக் கேட்டுக் கொண்டிருந்தால் பயன் இல்லை.
I do not allow this question. I cannot allow questions about individual municipalities and panchayats. The hon. Member may put a separate question.

SRI M. KALYANASUNDARAM : கேள்வி ஏ-க்குப் பதில் சொல்கின்ற நேரத்தில் இல்லை என்று சொன்னார்கள். உத்தரவு பிறப்பிக்காவிட்டால் எந்த எந்த மேஜர் பஞ்சாயத்துக்களை முனிசிபாலிடியாக்கலாம் என்று ஆலோசனை இருந்து வருகிறதா ? அப்படியானால் அவை எந்த எந்த முனிசிபாலிடி ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இப்போது 22 பஞ்சாயத்துக்களை அவ்விதம் ஆக்கலாம் என்று திட்டத்தில் இருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : அவற்றின் பெயர்கள் . . .

MR. SPEAKER : The hon. Member must put a separate question.

SRI K. SATTANATHA KARAYALAR : இப்போது மேஜர் பஞ்சாயத்துக்களாக இருக்கின்றனவகளை முனிசிபாலிடியாக மாற்றவேண்டாமென்று கோரி எத்தனை பஞ்சாயத்துகளிடமிருந்து மனுக்கள் வந்திருக்கின்றன ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்போகிறார்கள் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அது கனம் அங்கத்தினருக்குத்தான் நன்றாகத் தெரியும். அவர்கள் தான் இதில் மிகத்தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டு இந்தப் பிரச்சனையைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

Block Development meetings

MR. SPEAKER : As the hon. Member who gave notice of the question, namely, Sri B. Doraisami Reddiar, is not in his seat, the answer together with the question will be printed in the official proceedings.